# உளவியல் நோக்கில் சிக்மண்ட் பிறைடினது ஆளுமைக் கோட்பாடும் விமர்சனங்களும்

**ஐ.எல்எம். மாஹிர்**
*சிரேஷ்ட விரிவுரையாளர் (மெய்யியல்), சமூக விஞ்ஞானங்கள் துறை, கலை கலாசாரப்பீடம்*
*இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை*

**ஆய்வுச்சுருக்கம்**

*உளவியலில் அதிகளவில் பேசப்பட்ட சிந்தனையாளராக சிக்மண்ட் பிறைடினைக் குறிப்பிட முடியும். அந்தளவில் அவரது கருத்துக்கள் பாராட்டப்பட்டும் விமர்சிக்கப்பட்டும் வந்துள்ளன. நவீன உளவியலை விஞ்ஞான நோக்கில் ஆராய்ந்த பிறைட் அடிப்படையில் நரம்பியல் வைத்தயராவார். இவர் உளப்பகுப்பாய்வு முறை, உளப்பாலியல் விருத்திக்கட்டங்கள், கனவுப்பகுப்பாய்வு என்பவற்றை நனவிலி மனதின் செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டு விளக்கினார். உள்ளுணர்ச்சி, அமுக்கம் என்பவற்றினால் நனவிலி உருவாக்கம் பெற்றது என்று விளக்கிய அவர் குழந்தைப்பருவத்திக் பாலியல் மற்றும் ஆக்ரோச உந்துதல்களினால் ஆளுமை தீர்மானிக்கப்படுகின்றது என்றார். இதற்காக அவரது கருத்தியல் பெரும் விமர்சனத்திற்கு உள்ளானது. இத்தகைய ரீதியில் சிக்மண்ட் பிறைடின் ஆளுமைக்கோட்பாடு மற்றும் அதன் மீதான விமர்சனக் கருத்துக்கள் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமைகின்றது.*

**அறிமுகம்**

வியன்னாவைச்சேர்ந்த நரம்பியல் மருத்துவரான சிக்மண்ட் பிறைட் (Sigmund Freud 1856 – 1939) உளப்பகுப்பாய்வு அடிப்படையில் மனித நடத்தையினை விளக்கிய உளவியலாளர் ஆவார். மனவெழுச்சி, மனித நடத்தை தொடர்பான ஆய்வுகளில் அதிக ஆர்வம் காட்டிய பிறைட் மனித ஆளுமையினை உள இயக்கவியல் கோட்பாட்டினூடாக விளக்கினார். உளப்பகுப்பாய்வு, கனவுகள் பற்றிய பகுப்பாய்வு, நனவிலி பற்றிய விளக்கம், உளப்பாலியல் பருவக்கட்டங்கள் என இவரது பங்களிப்பு உளவியலில் பரந்துபட்டதாகும்.

எமது குழந்தைப்பருவத்தில் ஏற்படுகின்ற அனுபவங்கள் வளர்ந்த பின்னரான ஆளுமையினைத் தீர்மானிக்கிறது என்பது பிறைடினது கருத்தாகும். இதனை விளக்க அவர் மனதினை நனவிலி மனம் (Unconscious mind), முன் நனவிலி மனம் (Sub conscious mind), நனவு மனம் (Conscious mind) எனப்பிரித்து விளக்கியதோடு மனதின் செயற்பாடுகளை இட் (Id), ஈகோ (Ego), சுப்பர் ஈகோ (Super Ego) எனப்பகுத்து விளக்கினார். நனவு அனுபவத்தினை விட நனவிலி அனுபவம் சக்தி வாய்ந்தது என்ற இவர் நனவிலி நடத்தைகளின் அடிப்படையில் மனித ஆளுமை மாற்றத்தினை விளக்கினார்.

ஆளுமை பற்றிய கட்டமைப்புக் கோட்பாட்டில் பிறைட் நனவிலி அனுபவங்களின் பங்களிப்புப்பற்றி விபரித்தார். உள இயக்காற்றல் அமைப்புச் செயற்பாடுகள், உளப்பாலியல் விருத்திக்கட்ட விருத்தியில் செயற்படுகின்றது என்ற இவர் மனித ஆளுமை விருத்தியின் பிரதான இயக்கியாக பாலுமை (Sexuality) தொழிற்படுகின்றது என்றார். இதனால் இவரது இக்கோபாடு கடந்த நூற்றாண்டில் பெரும் விமர்சனத்திற்குள்ளானது.

சிக்மண்ட் பிறைடின்படி மனித ஆளுமையானது சிக்கலானதும் பல கூறுகளையும் உள்ளடக்கியது. இவரது ஆளுமை பற்றிய உளப்பகுப்பாய்வுக் கொள்கையின் அடிப்படையில் இட்,ஈகோ, சுப்பர் ஈகோ என்ற மூன்று கூறுகளும் சிக்கலான நடத்தைகளை ஒழுங்கமைப்பதில் ஒன்றிணைந்து செயற்படுகின்றன (Boag, 2014). இந்த மூன்று கூறுகளும் ஆளுமையின் தனித்துவமான சக்திவாய்ந்த ரீதியில் வெளிப்படுகின்றன. இவை வாழ்வின் வெவ்வேறு புள்ளிகளில் வெளிப்படுகின்றன.

எமது ஆளுமையின் ஒரு பகுதி மிக அடிப்படைத் தூண்டுதல்களினால் அழுத்தமுற்றுமுதன்மைப் பண்புகளை வெளிப்படுத்த உந்துதல் செய்யும். ஆனால் மற்றைய பகுதி அத்தூண்டலை உள்வாங்கிக் கொண்டு யதார்த்தத்தின் அடிப்படையில் எமது செயற்பாடுகளை வடிவமைக்கும் என்பது பிறைடினது கருத்தாகும். இதனடிப்படையில் பிறைடினது ஆளுமைக்கோட்பாட்டின் வெளிப்பாட்டு மற்றும் செயற்பாட்டுத்தளங்கள் தொடர்பில் இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

**பிறைடினது மனித மனதின் கட்டமைப்பு**

பிறைட் மனித மனதின் அடிப்படைக்கட்டமைப்புக்களாக இட் (Id), ஈகோ (Ego), சுப்பர் ஈகோ (Super Ego) என்பவற்றைக் குறிப்பிடுகிறார். இவை மூன்றுக்கும் இடையிலான மோதல்களும், அவை எவ்வாறு 'விருப்பம்' என்பதைத் தீர்மானிக்கிறது என்பதையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்கிடையிலான சமநிலையைக் கண்டறிவதற்கான முயற்சியும், நாம் எவ்வாறு உலகை நோக்குகிறோம் என்பதும் தீர்மானிக்கப்படுகின்றது. எமது உள்ளார்ந்த ஆக்ரோசத்தன்மை, இன்பம் தேடும் உந்துதல் மற்றும் இந்த உந்துதல்களைக் கட்டுப்படுத்தும் சமூகமயப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு என்ற இரண்டு போக்குகளுக்கிடையிலும் சமநிலையினைப்பேணுதலும் சூழ்நிலையினைக் கையாளுதலும் இதில் முக்கியம் பெறுகின்றது.

சிக்மண்ட் பிறைடின் அடிப்படையில் இட் என்பது பாலியல், ஆக்ரோச உந்துதல்களையும் மறைக்கப்பட்ட நினைவுளையும் உள்ளடக்கிய பகுதியாகும். சுப்பர் ஈகோ ஒழுக்கக் கட்டுப்பாடுகளாலான உந்துதல்களைக் கொண்டதாகும். இவை இரண்டினது உந்துதல்களுக்கும் இடையில் சமநிலையைப் பேணும் ஒரு பகுதியாகவே ஈகோ காணப்படுகின்றது.

**இட் (Id)**

இட் என்பது உள்ளார்ந்த மூலப்பகுதியாகும். இது ஆளுமையின் பலம் வாய்ந்த உள்ளுணர்வுக்கூறாகும். உள்ளார்ந்த ரீதியில் பாலியல் உணர்வுகளை

உள்ளடக்கிய வாழ்வூக்கத்தினையும் (Eros), ஆக்ரோச உணர்வுகளை உள்ளடக்கிய சாவூக்கத்தினையும் (Thanatos) கொண்டமைந்ததாக இட் காணப்படும். இதனை பிறைட் 'லிபிடோ' (Libido) எனவும் அழைப்பார். இலத்தீன் சொல்லான 'Lust' என்பதிலிருந்து தோற்றம் பெற்ற 'லிபிடோ' என்ற சொல்லின் அர்த்தம் இயல்பூக்கத்துடன் இணைந்த கூட்டுச்சக்தி என்பதாகும். இதுவே அதிகமான மனித நடத்தைகளுக்கு அடிப்படையானது என்றார். இட் உள்ளார்ந்த உந்துதல்களின் ஊக்கியினை செயற்படுத்தும் முனைப்பில் இயங்கக்கூடியது. இதற்கு எந்தவொரு விதிமுறையோ, கட்டுப்பாடுகளோ இல்லை. இதனால் பிறைட் இதனை இன்பக்கோட்பாடு (Pleasure Principle) என்கிறார் (Hergenhahn, 2009). அதாவது அடிப்படை உடலியல் தேவைகளை உடனடியாக நிறைவேற்றுவதன் மூலம் திருப்தியையும், இன்பத்தினையும் வேண்டி நிற்கும். இது தேவைகளையும், உந்துதல்களையும் மட்டுமே கருத்தில் கொள்ளும். அதைச்சுற்றியுள்ள எந்தவொரு அமைப்பினையும் கண்டு கொள்வதில்லை.

இது எமது மனதின் நனவிலிக்குரிய செயற்பாட்டுத்தளமாகும். மனக்கிளர்ச்சியினதும், ஆசைகளினதும் தூண்டல் திருப்தியை முன்னோக்கியதாக இட்டின் வெளிப்பாடுகள் அமையும். பிறக்கின்ற ஒரு குழந்தையில் இட் மட்டுமே காணப்படும். ஈகோ, சுப்பர் ஈகோ என்பன பின்னரே உருவாக்கம் பெறுகின்றன. இட் ஆனது ஒரு மனிதனின் வாழ்நாள் முழுவதும் குழந்தையாகவே இருக்கின்றது. இதற்கு வெளியுலகுடனான அனுபவம் இல்லை என்பதால் காலம் மற்றும் அனுபவத்திற்கேற்ப மாற்றமடையாது.

### ஈகோ (Ego)

'ஈகோ என்பதுஇட் (Id) இனது ஒரு பகுதியாகும் இதுவெளி உலகினால் நேரடியாகப் பாதிக்கப்படுவதாகும்'(Freud, 1923). இது யதார்த்தத்திற்குப் புறம்பாகச் செயல்படும் இட்டிற்கும் உண்மையான வெளியுலகிற்கும் இடையில் நடுநிலையாகச் செயற்படுகின்றது. இதுவே ஆளுமையின் தீர்மானம் மேற்கொள்ளும் பகுதியாகும். இட் குழப்பமானதும், காரணமின்றிச் செயற்படுவதுமாகும். ஆனால் ஈகோ காரணத்துடன் செயலாற்றுவதாகும். ஈகோ யதார்த்தக் கோட்பாட்டின் (Reality Principle) அடிப்படையில் செயற்படுகின்றது. இட்டினது கோரிக்கைகளையும், விருப்பங்களையும் யதார்த்த ரீதியில் செயற்படுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொள்கிறது. சமூகத்தின் எதிர்மறையான விளைவுகளைத் தவிர்ப்பதற்காக திருப்தியையும், இன்பத்தினையும் பிற்போடுகின்றது. எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என்பதில் சமூக யதார்த்தம் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் தீர்மானம் செய்கிறது.

இட் இனைப்போலவேஈகோவும் இன்பத்தை எதிர்பார்க்கின்றது. ஆனால் அது பதட்டம், பயம் அற்றதும் யதார்த்தத்துக்குப் பொருந்தக் கூடியதுமான வழிமுறையில் திருப்தி ஏற்படுத்தும் வகையில் செயற்பாடுகளை வடிவமைக்கிறது. தனது சுயம் அல்லது இட்டினது திருப்திக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பாடுளை அமைத்துக் கொள்வதன் மூலம் இன்பத்தைப் பெறுகின்றது.

ஆனால் தன்முனைப்பான இட் உடன் ஒப்பிடும்போது ஈகோ பலவீனமானதாகக் காணப்படும். எனினும் இட் இனை சரியான வழியில் நடத்துவதில் ஈகோ தொடர்ந்து செயற்படுவதால் சில வெகுமானங்களைப் பெற்றுக்கொள்ளும். பிறைட் 'இட் இனை ஒரு குதிரைக்கு ஒப்பிட்டார். குதிரையை ஓட்டுபவராகஈகோ செயற்படும். குதிரையின் மேலிருக்கும் மனிதர் அதன் வலிமையைக் கட்டுப்படுத்தி தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் செயற்பாட்டைச் செய்து கொண்டிருப்பார்'(Freud, 1923).அத்தகைய ரீதியிலேயே இதன் செயற்பாடுகள் அமைந்து காணப்படும்.

### சுப்பர் ஈகோ (Super Ego)

பெற்றோர் மற்றும் சூழலிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சமூகப்பெறுமானங்கள் சுப்பர் ஈகோவினை உருவாக்குகின்றன. குழந்தைகளுக்கு 3 வயது முதல் 5 வயதுக்குள் சுப்பர் ஈகோ உருவாக்கம் பெறுகின்றது. இட்டின் தூண்டுதல்களைக் கட்டுப்படுத்துவதே சுப்பர் ஈகோவின் செயற்பாடாகும். அதாவது சமூகத்தினால் தடை செய்யப்பட்ட பாலியல் மற்றும் ஆக்ரோச இயல்புகளைக் கட்டுப்படுத்துவதே இதன் வேலையாகும். இது வெறுமனே யதார்த்த மனநிலை என்பதைத்தாண்டி முழுமையான ஒழுக்க மனநிலை நோக்கி நகர்த்துகிறது.

சுப்பர் ஈகோவானது, மனசாட்சி (conscience) மற்றும் கருத்தியல் சுயம் (Ideal Self) என்ற இரண்டு அமைப்புக்களைக் கொண்டுள்ளது. மனசாட்சியானது குற்ற உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் ஈகோவினைத் தண்டிக்கக் கூடியது. அதாவது இட் (Id) இன் கோரிக்கைகளை ஈகோ (Ego) நிறைவேற்றினால் சுப்பர் ஈகோ (Super Ego) அந்நபரை ஆழ்ந்த குற்ற உணர்வுக்குத் தள்ளி விடும்.

கருத்தியல் சுயமானது ஒருவர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?, சமூகத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும்?, மற்றவர்களை எவ்வாறு நடத்த வேண்டும் மற்றும் மற்றவர்களோடு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? என்பதையெல்லாம் தீர்மானம் செய்கிறது. எனவே கருத்தியல் சுயத்திற்கு மாற்றமாக செயற்படுகின்றபோது சுப்பர் ஈகோ குற்ற உணர்வை ஏற்படுத்தும். மாறாக சரியான முறையில் நடந்து கொள்கின்றபோது சுப்பர் ஈகோ 'சுய பெருமை'யை உணரச்செய்யும்.




படம்: சிக்மண்ட் பிறைடின் மனதின் செயன்முறை

இட், ஈகோ, சுப்பர் ஈகோ என்ற மூன்றும் தனித்தனி எல்லைகளையுடைய மனதின் செயற்பாடுகள் அல்ல. அவை இணைந்தவாறாக ஒருவரது முழுமையான ஆளுமை மற்றும் நடத்தையைத் தீர்மானிக்கும் அம்சங்களாகும். ‘இவை மூன்றுக்கும் இடையிலான போட்டி மற்றும் மோதல்கள் தொடர்பில் சமாளிக்கும் திறனை பிறைட் ‘ஈகோ வலிமை’ (Ego Strength) என்ற சொல்லின் மூலம் விளக்கினார்’. எனவே ஈகோ வலிமை கொண்ட ஒரு நபர் இவற்றை திறன்பட எதிர்கொள்ளவும் செயற்படவும் முடியும். மாறாக ஈகோ வலிமையற்ற நபர் இதில் தோல்வியடைகிறார்.

**சிக்மண்ட் பிறைடின் நனவிலி (Unconscious)**

சிக்மண்ட் தனது உளப்பகுப்பாய்வுக் கொள்கையினை ‘நனவிலி’ பற்றிய விஞ்ஞானமாகவே முன்வைத்தார். பிறைடுக்கு முந்திய மெய்யியலாளர்கள் நனவிலி என்பதை அறிய முடியாத மனதின் பகுதி என்றவாறே கூறி வந்தனர். எனினும் நனவுநிலைதான் பிரதான ஆய்வுப்பகுதியாக இருந்தது. ஆனால் பிறைட் நனவுநிலைச் செயற்பாடுகளிலிருந்து நனவிலியைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். எனினும் ‘நனவிலி’ பற்றிய கருத்தாக்கத்தை மிகத்துல்லியமாக வெளிப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தாலும் பிறைடின் மிக முக்கிய உளவியல் பங்களிப்பாக இதனைக் கொள்ளலாம்.

பிறைட் மனதின் தளவரைவு மாதிரியை (topographical model)உருவாக்கி தனது கோட்பாட்டை விளக்கினார். இதற்காக அவர் மனதினை மூன்றாகப்பிரித்து அதனை நீரில் மூழ்கியிருக்கும் பனிப்பாறைக்கு ஒப்பிட்டு விளக்கினார்.

இடம், தளம், பரப்பு என்பவற்றை மையமாகக் கொண்டதாக தள வரைவுக் கோணத்தின்படி உள்ளத்தில் மூன்று அடுக்குகள் உள்ளன. அவை நனவு (Conscious), முன் நனவு (Sub Conscious), நனவிலி (Unconscious) என்பனவாகும். இதில் நனவிலிப்பகுதி அதிக அளவிலும் முன்நனவுப்பகுதி அடுத்த அளவிலும் நனவுப்பகுதி குறைந்தும் இடம்பெற்றுள்ளன. இக்கோணம் எண்ணப்பதிவு அல்லது நினைவுருக்கள் அடிப்படையிலானது. மேலும் காலமுறை வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்டது (இரவிச்சந்திரன், 2007).

நனவுநிலை என்பது நாம் அறிந்த அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கியது. வெளிப்படையாகத் தெரியும் அறிந்த செயற்பாடுகள் நனவுநிலையானவை என்பது பிறைடினது கருத்து. முன்நனவில் இலகுவில் நினைவுக்குக் கொண்டு வரக்கூடிய எண்ணங்களும் நினைவுகளும் நினைவு படுத்தப்படும்போது வெளிப்படத் தயாராக இருக்கும். இது நனவிலிக்கு மேல் அல்லது முன்னால் இருக்கும் பகுதியாகும். இது சாதாரணமாக எமக்கு ஞாபகத்தில் இருக்கும் விடயங்களை உள்ளடக்கியதாகும். சாதாரணமான மனவெழுச்சி அனுபவங்கள் முன்நனவுப் பகுதியில் காணப்படும்.

எனவே மனதின் நனவிலிப் பகுதியானது நனவுநிலைக்கு எட்ட முடியாத விடயங்களால் அமுக்கப்பட்டிருக்கும். ஆனால் அதுதான் எமது தீர்மானங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றில் தாக்கம் செலுத்துகின்றது (Wilson, 2002).

பிறைடின் அபிப்பிராயப்படி நனவிலியே மனித நடத்தையினைத் தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த அமைப்பு முறையினை பிறைட் அவரது ஆளுமைக்கட்டிமைப்புக்குப் பயன்படுத்தினார். இதன்படி இட் (Id) ஆனது முழுமையாக நனவிலிப் பகுதிக்குரியது. ஈகோ (Ego), சுப்பர் ஈகோ (Super Ego)என்பன நனவு, முன் நனவு, நனவிலி என்ற மூன்று பகுதிகளிலும் காணப்படும்.

பிறைட் நனவிலியினை அமுக்கப்பட்ட ஆசைகளினதும், விருப்பங்களினதும் பகுதியாகும் என்றார். நிறைவேற்றப்படாத ஆசைகளே அமுக்கத்திற்குள்ளாகின்றன. அவை நனவிலி மனிதில் சென்று தேங்கிவிடுகின்றன. ஏலவே குறிப்பிட்டது போன்று இதிலேயே இட் காணப்படுகின்றது என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. மேலும் விரிவாகக் கூறுவதானால் ‘நனவிலி மனதில் பாலியல் மற்றும் ஆக்ரோசத் தன்மையினை வெளிப்படுத்தும் மனிதனது உயிரியல் உள்ளுணர்வுகளான வாழ்வூக்கம் அல்லது பாலூக்கம் (Eros), சாவூக்கம் (Thanatos) என்பன காணப்படும் (Freud, 1915). இத்தூண்டல்கள் பகுத்தறிவு ரீதியற்றவை என்பதால் எமது நனவு மனதினை அடைவதில்லை. நனவிலியின் உந்துதல்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், அதன் செயற்பாடுகளைத் தகர்க்கும் வகையிலும் நனவுநிலைப் தற்காப்புப் பொறிமுறைகள் (defense mechanisms)பயன்படுத்தப்படும் என்பது பிறைடின் கருத்தாகும் (Hergenhahn, 2009).

நனவிலி மனதினை பகுப்பாய்வு செய்வதற்காக சிக்மண்ட் பிறைட் பின்வரும் வழிமுறைகள் தொடர்பில் விளக்கமளித்துள்ளார்.

1. சுயாதீன கூட்டுச்சேர்வு முறை (Free Association): இம்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் நனவிலி மனதின் உணர்வுகளை நனவுநிலைக்குக் கொண்டுவர முடியும் என பிறைட் நம்பினார். அதாவது எந்தத் தடையும் இன்றி, சங்கடங்களும் இன்றி மனதில் தோன்றுகின்ற அனைத்தையும் வெளிப்படையாகப் பேச வைக்கும் முறையாகும். இதன்மூலம் ஒருவரது மறைக்கப்பட்ட அல்லது அடக்கப்பட்ட எண்ணங்கள், வேதனை மிகுந்த சிறுபராய அனுபங்கள் என்பவை பற்றி அறிந்து கொள்ளலாம் என பிறைட் நம்பினார்.

2. கனவு பற்றிய விளக்கம் (Dream Interpretation): கனவுகள் நனவிலியை அறிவதற்கான மற்றுமொரு வழி என்றார் பிறைட். நனவிலியில் மறைக்கப்பட்ட விடயங்கள் கனவுகளின் வழி வெளிப்படும். அவை குறியீடுகளாக,மாறுபட்ட ரீதியில் வெளிப்படக்கூடும் என்றார். மேலும் அமுக்கப்பட்ட ஆசைகள் நிறைவேற்றப்படும் இடமாகவும் அவர் கனவைக் கருதினார். 'நனவிலியின் இயல்பைப் புரிந்துகொள்ள கனவு சிறப்பிடம் வகிக்கிறது. அதனால்தான் கனவை நனவிலிக்கான அரசபாதை (Royal Road) என்கிறார் பிறைட் (இரவிச்சந்திரன், 2007).

**பிறைடின் பாலியல் விருத்திக்கட்டங்கள்**

குழந்தைப்பருவ அனுபவங்களே ஆளுமையினைத் தீர்மானிக்கிறது என்பதில் திடமான நம்பிக்கை கொண்டிருந்த பிறைட் குழந்தை வளர்ச்சிப்பருவத்தை விளக்க ஐந்து பருவக்கட்டங்களை அடிப்படையாகக் கொண்டார். இதில் பாலியல் உணர்வை அடிப்படையாகக்கொண்டு குழந்தைப்பருவக் கட்டமைப்பைவிளக்கினார். அதன் ஒவ்வொரு படிமுறைகளிலும் 'லிபிடோ' காணப்படுவதாகவும் குழந்தைகளிடம் பாலியல் உணர்வுகள் காணப்படுகின்றன என்ற அவர் அதனை 'குழந்தைப்பாலுமை' என விளக்கினார்.

பிறைட்மனித வாழ்க்கையானது பதட்டம் மற்றும் இன்பம் என்பவற்றால் கட்டமைக்கப்பட்டது என நம்பினார். லிபிடோ (பாலியல் ஆற்றல்) கட்டியெழுப்பப்படும் போது பதட்டமும், அது வெளியேற்றப்படும் படும்போது இன்பமும் ஏற்படும் என்பதேஇவரது விளக்கத் தத்துவார்த்தம் என்பதால் நம்பிக்கையாக இருந்தது. மனித விருத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் இது தொடர்கின்றது என்பதை பின்வரும் ஆளுமை விருத்திக்கட்டங்களை மையப்படுத்தி விளக்கினார்.

1. **வாய்வழி இன்பப்பருவம் (Oral Stage)**: இப்பருவம் பிறந்தது முதல் இரண்டு வயது வரையான காலப்பகுதியாகும். இப்பருவத்தில் குழந்தையின் இன்பம் வாயினை மையமாகக் கொண்டிருக்கும். கிடைக்கின்ற அனைத்தையும் வாயில் வைப்பதன் மூலம் குழந்தை இன்பம் காணும். இக்காலப்பகுதியில் பிள்ளை தாயின் மார்பகங்களில் பாலருந்துதல், விரல்களைச் சூப்புதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும். இத்தகைய செயற்பாடுகளில் தடை ஏற்படுகின்ற போது வளர்ந்த பின்னர் நகம் கடித்தல், புகை பிடித்தல், பெருவிரல் சூப்புதல் போன்ற அசாதாரண நடத்தைக்கான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.
2. **குதவழி இன்பப்பருவம் (Anal Stage)**: இது 2 வயது தொடக்கம் 3 வயது வரையான காலப்பகுதியாகும். இதன்போது லிபிடோ குதவழி மீது ஏற்படுகின்றது. இப்பருவத்தில் குழந்தை மலம் கழிப்பதில் விருப்பம் கொள்கிறது. மலம் வெளியேற்றல்,அதற்கான ஆயத்தம் என்பவைகளை இன்பமாக கொள்கிறது. இது குழந்தைகள் தங்களது உரிமைகளுக்கும் விருப்பங்களுக்கும் புற உலகின்பால் கோரிக்கை விடுக்கக்கூடியவர்கள் என்பதைக் காட்டுகின்றது. ஆனால் பெரியவர்களால் மலம் எங்கு கழிக்கப்பட வேண்டும், அதை எவ்வாறு கையாள வேண்டும் என்பன அறிவுருத்தப்படுகின்றது. இந்தக் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் என்பதைப் பிள்ளை உணரும்போது இப்பருவத்தில் ஈகோ விருத்தியடைகிறது.மலத்தை வெளியேற்றுவதல், மலத்தை அடக்குதல்,குதத்தசைகள் தொடுகைக்குள்ளாதல் போன்றவை இன்பத்துடன் தொடர்புடையவை. இந்த இன்பம் மறுக்கப்படுகின்ற போது வளர்ந்தபின் ஆளுமையானது கலகத்தன்மையுடைய, குழப்பமான, ஒழுங்குமுறையற்றதாகக் காணப்படும் என்கிறார் பிறைட்.
3. **பாலுறுப்பு இன்பப்பருவம் (Phallic Stage)**: இது 3 வயது முதல் 6 வயது வரையான இன்பப்பருவமாகும். இதன்போது இன்பமீட்டுதல் பாலுறுப்பு சார்ந்திருக்கும். இதன்போது பிள்ளை உடற்கூற்றியல் அடிப்படையிலான பாலியல் வேறுபாட்டினை அறிந்து கொள்கிறது. இது பாலியல் தூண்டல், சீற்றம், போட்டி, பொறாமை, கோபம் போன்ற மோதலை இயக்குகின்றது. இதனை பிறைட் இடிபஸ் சிக்கல் (Oedipus complex)என்பதன் மூலம் விளக்குகிறார்.இதனை பிள்ளை ஒத்த பாலிய பெற்றோரை அடையாளம் காணல் மூலம் தன்னைப் பொருத்திப் பார்த்துக்கொள்கிறது. இடிபஸ் சிக்கலில் ஆண் குழந்தையின் தாய் மீதான ஈர்ப்பினைக் குறிக்கிறது என விளக்கினார்.
4. **மறைநிலைப் பருவம் (Latency Stage)**: இப்பருவம் 6 வயது முதல் பூப்பெய்தும் வரையான காலப்பகுதியாகும். இப்பருவத்தில் பாலியல் விருத்தி எதுவும் ஏற்படுவதில்லை. இப்பருவத்தில் பிள்ளையின் கவனம் பாடசாலை, படித்தல், நண்பர்கள் என்றவாறாகக் காணப்படும். இதன்போது பிள்ளைகளின் ஆற்றல் புதிய திறன்களை வளர்த்தல், புதிய அறிவினைப்பெறுதல், விளையாட்டுக்களில் ஈடுபடுதல் என்றவாறாகக் காணப்படும்.
5. **பாலியல் இன்பநிலை (Genital Stage)**: இப்பருவம் பூப்பெய்தது முதல் இளமைப்பருவம் வரையான காலப்பகுதியாகும். பிறைடினது ஆளுமை விருத்தியின் கடைசிக்கட்டம் இதுவாகும். இப்பருவத்தில் பிள்ளைகள் பாலியல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கும் என்கிறார். சுய இன்பம், எதிர்ப்பால் இன்பம் என்பவற்றை நோக்கி பிள்ளையின் கவனம் செலுத்தப்படும். இதன்போது பிள்ளைகள் தனக்கான இணையைத் தேர்ந்தெடுக்க முற்படுகின்றனர்.

இவ்வாறு பாலியல் சார்ந்த விருத்தியினை அடிப்படையாகக்கொண்டு பிறைட் பிள்ளை விருத்திக்கட்டங்களை விளக்கினார். இதனடிப்படையில் வளர்ந்த பின்னரான பிள்ளையின் ஆளுமை மாறுபடும் விதத்தினையும், குழந்தைப்பருவ அமுக்கங்களும் அனுபவங்களும் ஆளுமையினைத் தீர்மானிக்கின்றன என்பதையும் எடுத்துரைத்தார்.

**பிறைடின் ஆளுமைக்கோட்பாடு மீதான விமர்சனங்கள்.**

உளவியல் வரலாற்றில் பிறைடின் ஆளுமைக்கோட்பாடு மிகப்பிரதான கவனத்தைப் பெற்றிருப்பினும் அவர் முன்மொழிந்த 'குழந்தைப்பாலுமை' என்ற கருத்தியல் விளக்கத்தினால் பெரும் விமர்சனத்திற்குள்ளானது. கடந்த நூற்றாண்டின் அதிக விமர்சனத்தை எதிர்கொண்ட சிந்தனையாளராக சிக்மண்ட் பிறைட் அறியப்படுகின்றார். குறிப்பாக பிறைடின் கருத்தியல்களால் கவரப்பட்டு அதனை ஏற்றுக்கொண்டு, பின்னர் அதிலிருந்து மாறுபட்ட கருத்தியலை உருவாக்கிய அல்பிரட் அட்லர், கார்ள் யுங்,கரேன் ஹோர்னி போன்ற உளவியலாளர்கள் பாலியல் ஊக்கம் மாத்திரமன்றி ஆளுமையினைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினர்.

### அல்பிரட் அட்லர் (Alfred Adler 1870 – 1937)

பிறைடின் நண்பரும் வியன்னா உளப்பகுப்பாய்வுச் சமூகத்தின் முதல் தலைவருமான அட்லர் சிக்மண்ட் பிறைடின் கருத்திலிருந்து தன்னைத் துண்டித்துக்கொண்டு வெளியேறிய முதலாவது கோட்பாட்டாளர் ஆவார். பின்னர் இவர் தனிநபர் உளவியலை நிறுவி 'சிறுவயதில் நாம் தாழ்வு மனப்பான்மையினால் தூண்டப்படுகிறோம்' என்ற கருத்தை முன்வைத்தார். பிறைட் சிறுவயதில் பாலியல் மற்றும் ஆக்ரோச எண்ணங்களே எமது செயற்பாடுகளைத் தீர்மானிக்கிறது என்றார். அதிலிருந்து மாறுபட்டு அட்லர், மனிதன் பிறக்கும்போதே தாழ்வு மனப்பான்மையுடன் (inferiority) பிறக்கிறான். அவனது எண்ணங்களும், சிந்தனையும், நடத்தைகளும் மேன்மை (superiority)நோக்கிய உந்துதலாகவும் போராட்டமாகவும் அமைகின்றது என்றார்.

பிள்ளையின் விருத்தியில் பாலியல் உந்துதல்களுக்குப் பதிலாக சமூகத் தொடர்புகள் தாக்கம் செலுத்தும் என அட்லர் நம்பினார். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றபோது மகிழ்ச்சியடைகின்றனர் என்பது அவரது அபிப்பிராயமாக இருந்தது. மேலும் சம உரிமையை வழங்குதலும், ஏனையோரை சமமாக மதித்தலுமே மிகப்பிரதானமான குறிக்கோள் என்றார். எனவே மனிதர்களின் விருத்தியில் சமூக உந்துதலே செல்வாக்குச் செலுத்தும் என்ற அட்லர் மூன்று பிரதான சமூக அடைவுகள் குறித்து விளக்கினார். அதாவது தொழில், நண்பர்கள், வாழ்க்கைத்துணை என்பனவே அவையாகும். அட்லரின்படி பாலியல் உந்துதலையோ, நனவிலியையோ அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

### கார்ள் யுங் (Carl Jung 1875 – 1961)

சுவிஸ் நாட்டைச்சேர்ந்த மருத்துவரான கார்ள் யுங் பிறைடின் நெருக்கமான நண்பராக இருந்தவர். பின்னர் பிறைடின் கருத்தியலோடு முரண்பட்டு புதிதான சிந்தனைப்பள்ளியைத் தோற்றுவித்தார். பிறைடின் 'உளப்பகுப்பாய்வு'க்கு எதிரானதாக தனது கோட்பாட்டை அறிவித்துக்கொண்ட யுங் 'பகுப்பாய்வு உளவியல்' என தனது கோட்பாட்டினை அழைத்துக்கொண்டார்.

அட்லரைப்போலவே யுங் குழந்தைப்பருவ பாலியல் உந்துதல் பற்றிய கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் பிறைட் பேசிய தனியாள் நனவிலியை (personal unconscious) ஏற்றுக்கொண்டார். எனினும் அது போதுமையுடைய கருத்தல்ல என்ற அவர் கூட்டு நனவிலி (collective unconscious) என்ற கருத்தியலை புதிதாக முன்வைத்தார். கூட்டு நனவிலி என்பது தனியாள் நனவிலியின் முழுமைப்பகுதியாகும். இது எமது மன வடிவங்கள், நினைவகத்தடயங்கள் என அனைத்தையும் கொண்டிருக்கும். இத்தகைய நினைவுகள் மூலப்படிவங்கள் (archetypes) வடிவில் எமக்குள் தொடர்ச்சியாக இருக்கின்றன. மூலப்படிவங்கள் பொதுமைக்கருத்தியல்களாகவும், வேறுபட்ட கலாசாரங்களாலும் கலை, இலக்கியம் மற்றும் கனவுகள் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன. மரணம் ஏற்படல், வெற்றிக்காகப் போராடுதல், சுதந்திரமாக இருத்தல் போன்ற உலகப் பொதுவான அனுபவங்கள் மூலப்படிவங்களின் பாற்பட்டதாகும். உயிரியல் ரீதியாகவும் எல்லா மனிதர்களுக்கும் கருப்பொருளே வழங்கப்படுகின்றது. அவை நாட்டுப்புற மற்றும் புராணக்கதைகளில் உள்ள சின்னங்களான ஹீரோ, கன்னி, முனிவர், தந்திரக்காரர் போன்றது என யுங் நம்பினார்.

பரம்பரைப் பரிணாமத்தின் வழியாக மனித மனதில் உடன் பிறந்த எண்ணங்கள் தொடர்ந்து கடத்தப்பட்டு வருகின்றது என்பது யுங்கின் கருத்தாகும். இது மனிதத் தொடர்ச்சியின் பரிணாமத்தின் வழியாக நிகழ்கிறது. இதன் வழியாக உருவானதே கூட்டு நனவிலியாகும். இருட்டு, பாம்பு, சிலந்தி போன்றவற்றின் மீது ஏற்படும் பயத்தினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். ஆளுமையின் பிரத்தியேக அமைப்பு கூட்டு நனவிலியினால் உருவாக்கப்படுகின்றது என்ற இவர் இதனை பரம்பரை (பரிணாம) நினைவுகள் மற்றும் மூலப்படிவ உருக்கள் (images archetypes) எனக் குறிப்பிடுகிறார்.யுங்கினதுஇச் சிந்தனையானது டார்வினிய பரிணாமக் கோட்பாட்டின் தழுவல் எனக் கொள்ளலாம்.

### கரன் ஹோர்னி(Karen Horney 1885 – 1952)

பிறைடின் உளப்பகுப்பாய்வு ஆய்வாளராக பயிற்சி பெற்ற முதல் பெண் உளவியலாளர் கரன் ஹோர்னி ஆவார். அட்லர், யுங் போன்றோரைப்போலவே ஹோர்னியும் சிக்மண்ட் பிறைடின் கருத்தியல் தளத்திலிருந்து வேறுபட்டு விலகியவர் ஆவார். யுங் கூறியதுபோல் இவரும் ஒவ்வொரு மனிதனும் சுய புரிதலைக் கொண்டிருப்பவன் என்றார். இவரது கருத்தின்படி, உளப்பகுப்பாய்வின் நோக்கம் ஆரோக்கியமான சுயத்தினைக் கட்டமைப்பதாக இருக்க வேண்டுமே தவிர அது குழந்தைப்பருவ செயலிழப்புத்தன்மையை நோக்கியதாக இருத்தலாகாது என்றார்.

ஹோர்னியின் கோட்பாடுகள் நனவிலிப் பதகளிப்பினை மையமாகக் கொண்டுள்ளன. அதாவது குழந்தைப்பருவத்தில் தனிமைப்படுத்தப்படல் அல்லது கைவிடப்படல் என்பன பதகளிப்பை ஏற்படுத்துவதனூடாக பிள்ளை விருத்தியைத்தடை செய்யும் என்றார். இந்தப்பதகளிப்பை பிள்ளைகள் சமாளிப்பதற்கான மூன்று வழிமுறைகளை இவர் பரிந்துரைத்தார். அவை சமாளித்தல், மக்களை

நோக்கி நகர்தல், இணைப்பை ஏற்படுத்தல் அல்லது தங்கியிருத்தல் என்பனவாகும். பிள்ளைகள் அன்புக்காகவும் பராமரிப்புக்காகவும் பெற்றோரில் தங்கியிருக்கின்றனர். இது பதகளிப்பு ஏற்படுவதிலிருந்து தவிர்க்கிறது. இத்தகைய அணுகுமுறையினையே ஏனைவர்களிடமும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது இவரது அபிப்பிராயமாக இருந்தது.

இவர்களை புதிய பிறைடிய வாதிகள் (neo-Freudians) என அழைக்கப்படுகின்றார்கள். இந்த உளவியலாளர்கள் பிறைடின் கருத்தியல்களிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி தங்களது பாணியில் தனித்துவமான புதிய கோட்பாட்டுக் கருத்தியல்களை உருவாக்கினார்கள். குழைந்தப்பருவ அனுபவங்கள் முக்கியமானவை என்பதில் இவர்கள் பிறைடுடன் ஒத்துப்போனார்கள். ஆனால் அவர் பாலியல் உணர்வுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் குறைத்து சமூக மற்றும் சூழல் காரணிகள் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன என விளக்கினார்கள். எனினும் இவர்களது கருத்துக்கள்கூட பின்னர் வந்த உளவியலாளர்களால் விமர்சிக்கப்பட்டவைகளே எனலாம்.

### முடிவுரை

மெய்யியல், உளவியல், உளவளத்துணை, மருத்துவம் என அனைத்திலும் சிக்மண்ட் பிறைடின் கருத்தியல் தாக்கம் இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருந்தது என்றால் அது மிகையில்லை. நவீனகால உளவியலை புதிய கண்ணோக்கில் ஆராய்ந்தவர் என்ற வகையில் பிறைடின் கருத்துக்கள் உளவியல் முக்கியத்வுதுவம் வாய்ந்தவை. மனித உள்ளுணர்ச்சிகளே மனித நடத்தைகளுக்கு அடிப்படை என்பதை விளக்குவதற்காக பிறைட் மனம் பற்றிய ஊடக அமைப்பினை உருவாக்கி எமது உள்ளார்ந்த செயற்பாடுகளை விளக்கினார்.

பிறைடினது உளவியல் கருத்துக்கள் அகநிலை சார்ந்ததாக அமைந்திருந்திருந்தது. அவரது நோக்கில் சமூகநிலைப்பட்ட விடயங்கள் இரண்டாம்நிலையாக்கப்பட்டு அவன் என்ன உணர்கிறான் என்பதை மாத்திரம் முன்னிலைப்படுத்தி மனித சுயம் சார்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதனடிப்படையில் அவர் மனித ஆளுமையினை விளக்கியிருந்தார். ஆனால் அவை உளவியலில் ஒரு முழுமையான கருத்தியல் தளமாக அமையவில்லை.

தனிமனித உள்ளுணர்வு பற்றிச் சிந்தித்த பிறைட் கடந்த நூற்றாண்டின் சர்ச்சைக்குரிய சிந்தனையாளர் ஆவார். அதற்குக் காரணம் அவர் பேசிய ‘குழந்தைப்பாலுமை’ என்ற கருத்தியலாகும். இதனால்தான் அவர் அவரது மாணவர்கள் மற்றும் நண்பர்களால்கூட நிராகரிக்கப்பட்டார். எனினும் தனது கருத்தில் நின்று பிறைட் ஒருபோதும் பின்வாங்கவில்லை. அவரது உளப்பகுப்பாய்வினை விஞ்ஞானம் என்ற ரீதியில் ஏற்றுக்கொண்ட பிறைட் எதிர்காலத்தில் தனது கருத்தியல் புரிந்து கொள்ளப்படும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார் என்கிறார்கள் வரலாற்றியலாளர்கள்.

பிறைடினைப்படித்த பலர் அவரை தவறாகப் புரிந்து கொண்டிருந்தனர் என்றார் லக்கான் என்ற உளவியலாளர். பிறைடின் படைப்புக்கள் ஆழ்ந்து வாசிக்கப்பட வேண்டியவை. காலவரிசைப்படி புரிந்து கொள்ளப்பட வேண்டியவை என்ற கருத்து லக்கான் போன்ற சிந்தனையாளர்களிடம் காணப்பட்டது. அத்தகைய ரீதியில் விஞ்ஞான மற்றும் உளவியல் உலகில் பெரும் கவனிப்பைப்பெற்ற பிறைட் வரலாற்றில் ஒரு திருப்புனைச் சிந்தனையாளர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

ஈறாக, பாலியல் மற்றும் ஆக்ரோச உணர்வுகளினால் ஆளுமை தீர்மானிக்கப்படுகின்றது என்ற பிறைடின் கருத்தாக்க விளக்கம் எத்தகைய மாற்றீட்டுக் கோட்பாடுகள் மூலம் மீள் வியாக்கியானத்திற்குட்பட்டாலும் பாலியல், ஆக்ரோசம் என்பன முற்றாக நிராகரிப்புக்குள்ளாயினும் இவற்றின் பெறுமானம் இன்னும் மதிப்பிடப்பட வேண்டியவையே.

## References

1. Boag S. Ego, drives, and the dynamics of internal objects. *Front Psychol. (2*014);5:666. doi:10.3389/fpsyg.2014.00666
2. Jung, C. G. (1921). Psychological types. The collected works of CG Jung, Vol. 6 Bollingen Series XX.
3. Freud, S. (1915). *The unconscious.* SE, 14: 159-204.
4. Freud, S. (1924). A general introduction to psychoanalysis, trans. Joan Riviere.
5. Wilson, T. D. (2004). Strangers to ourselves. Harvard University Press.
6. Fisher, S. & Greenberg, R. P. (1996). *Freud scientifically reappraised: Testing the theories and therapy.* New York: Wiley.
7. Hergenhahn, B.R. (ed.) (2009). An Introduction to the History of Psychology. Belmont, CA: Wadsworth.
8. Horney, K. (1967). Feminine Psychology, New York: W. W. Norton.
9. Horney, K. (1942). Self-Analysis, New York: Norton.
10. Hitchcock, S. T. (2004) *Karen Horney: Pioneer of Feminine Psychology*, Chelsea House Publishers.
11. Freud, S. (1920). *Beyond the pleasure principle*. SE, 18: 1-64.
12. Freud, S. (1923). *The ego and the id*. SE, 19: 1-66.
13. இரவிச்சந்திரன், தி.கு., (2007), ∴ப்ராய்ட் யூங் லக்கான் அறிமுகமும் நெறிமுகமும், சென்னை : அடையாளம்.

14. இரவிச்சந்திரன், தி.கு., (2005), சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், சென்னை: அலைகள் வெளியீட்டகம்.